**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070320236096

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.11.2022

Accepted: 23.12.2022

Published: 01.01.2023

Citation:
Megarajah, T. "Kanngi Valakkurai Epic and Religious and Caste Dominance of the Tamil Community." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 3, 2023, pp. 122–32

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6096

*Corresponding Author:
vamannagaiah@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kanngi's Advocacy Epic and The Religious and Caste Dominance of the Tamil Community

**T. Megarajah**

*Tamil Studies, Eastern University, Sri Lanka*

*https://orcid.org/0000-0002-5572-3762*

**Abstract**

"Kannagi Valakkurai" is as an Epic based on Silapathikaram. It has been compiled by V.S.Kandaih in 1968 and it is sung during the rituals in Kannagi temples in Batticaloa District of Sri Lanka. Kannagi Valakkurai is an important epic which talks about the micro-politics of Eelam's religion and caste. This research reflected that the caste and religion of the people of Eelam have the influence in the epic of "Kannagi valakkurai". Further, this study was done with the analytical methodology.

**Key Words:** Kannagi Valakkurai, Tamil Community, Caste, Dominance, Ritual, Micropolitics

**References**

1. Edgar Thurston. (1909). Castes and Tribes of South India. Volume VI. Madras: Government Press
2. Gananath Obeyesekere. (1984), The Cult of The Goddess Pattini, United states of America: The University of Chicago Press

# கண்ணகி வழக்குரைக் காப்பியமும் தமிழ்ச் சமூகத்தின் சமய, சாதிய ஆதிக்கமும்

*முனைவர் த. மேகராசா*
தமிழ் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**
*கண்ணகி வழக்குரைக் காப்பியம் சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். ஏடுகளில் புழக்கத்தில் காணப்பட்ட இக்காப்பியம் 1968 ஆம் ஆண்டு வி.சீ. கந்தையாவினால் தொகுத்து வெளியிடப்பட்டது. இது ஒவ்வொரு வருடமும் கண்ணகி அம்மன் சடங்கு காலத்தில் இலங்கையின் மட்டக்களப்புப் பிரதேச கண்ணகி அம்மன் கோயில்களில் பக்தியோடு பாடப்படுகிறது. ஈழத்து சமய, சாதிய நுண்ணரசியலைப் பேசும் முக்கிய நூலாக இது உள்ளது. அவ்வகையில் இந்த ஆய்வானது பகுப்பாய்வு முறையியலுக்கு அமைய கண்ணகி வழக்குரைக் காப்பியத்தில் ஈழத்து மக்களின் சமய, சாதிய ஆதிக்கம் காணப்படுவதை எடுத்துக்கூறுகின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *கண்ணகி வழக்குரை, தமிழ்ச் சமூகம், சாதியம், ஆதிக்கம், சடங்கு, நுண்ணரசியல்*

## அறிமுகம்

கண்ணகி தொன்மம் சிலப்பதிகாரம் என்னும் பெரும் காப்பிய உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளதுடன் அதனையடிப்படையாகக் கொண்டு தமிழகம், கேரளம், ஈழம் ஆகிய இடங்களில் கண்ணகி தொடர்பான இலக்கியங்கள் பல எழுவதற்கும் வழியமைத்துள்ளது. சிலப்பதிகாரம் இலக்கியப் பிரதியாக மட்டுமல்லாது அரசியல், சமூகம், சமயம், பண்பாடு என பல தளங்களில் பேசப்படும் பன்மைத்துவப் பிரதியாகவும் காணப்படுகின்றது. இதன்வழி ஈழத்தில் எழுந்த, எழுத்திலக்கிய மரபிற்கும் வாய்மொழி இலக்கிய மரபிற்கும் இடைப்பட்டதும் அளிக்கை வடிவம் சார்ந்ததுமான கண்ணகி வழக்குரைக் காப்பியமும் ஈழத்துச் சமய, சாதிய நுண்ணரசியலைப் பேசும் முக்கிய நூலாகவுள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வானது 1968 ஆம் ஆண்டு வி.சீ. கந்தையாவினால் பதிப்பிக்கப்பட்ட கண்ணகி வழக்குரைக் காப்பியத்தை முதனிலைச் சான்றாதாரமாகக் கொண்டு பகுப்பாய்வு ஆய்வு முறையியலுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக கண்ணகி வழக்குரையிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு ஆய்வின் நோக்குக்கு ஏற்ப நுண்மையான கூறுகளாகப் பகுத்து புதிய உண்மைகளைக் கண்டறியும் நோக்கில் விளக்கப்படுகின்றன.

## கண்ணகி வழக்குரைக் காப்பியமும் அதன் இயங்கு தளமும்

கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பிரதேசங்களிலுள்ள கண்ணகி கோயில்களில் வருடாந்தம் நடைபெறும் வழிபாட்டின்போது பக்தியோடு பாடப்பட்டுவரும் மக்கள் காப்பியமாகக் கண்ணகி வழக்குரை விளங்குகின்றது. ஏட்டில் வழங்கி வந்த இக்காப்பியத்தைப் பதிப்பிக்கும் முயற்சிகளில்

சுவாமி விபுலாநந்தர், க.கணபதிப்பிள்ளை, எப்.எக்ஸ்.நடராசா முதலானோர் ஈடுபட்டனர். கோயிலுக்குள் வைத்துப் பாடப்படும் புனித நூலைப் பதிப்பிப்பது தெய்வக்குற்றமாகும் என்ற மனநிலைப்பாட்டைக்கொண்ட கோயில் நிருவாகங்களின் இறுக்கத்தால் அவர்களின் பதிப்பு முயற்சிகள் முழுமையெய்யவில்லை. எனினும் வி.சீ.கந்தையா பல சவால்களுக்கு முகம்கொடுத்து கண்ணகி கோயில்களில் பாடப்பட்டுவந்த வழக்குரை ஏடுகளைச் சேகரித்து அவற்றை ஒப்பு நோக்கி, **1968** ஆம் ஆண்டு பதிப்பித்தார்.

எவ்.எக்ஸ்.சி.நடராசா மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயத்தில் காணப்பட்ட ஏட்டிலுள்ள பாடல்களைச் சான்று காட்டி இந்நூல்கி.பி.**14** ஆம்நூற்றாண்டுக்குரியதென்பார். **(1989:13)** கண்ணகி வழக்குரையின் ஆசிரியர் தொடர்பாக ஆய்வாளர்களிடையே கருத்து முரண்பாடுகளுள். காங்கேசன், ஆரியர்கோன், குடிநயினாப்பணிக்கன், தேவையர்கோன், சகவீரன், தென்தேவை நிருபன் என்று இந்நூலினகத்தே நூலாசிரியர் தொடர்பாக வெவ்வேறு பெயர்கள் வெவ்வேறு இடங்களில் கூறப்பெற்றுள்ளமை இதற்கான அடிப்படைக் காரணமாகும். பல ஆய்வாளர்கள் சகவீரனை ஆசிரியராகக் குறிப்பிடுவர். சகவீரன் என்பது காங்கேயனின் பட்டப்பெயர் எனவும் அறிய முடிகின்றது. "எப்படியும் காங்கேயன் என்ற பெயரே நூலுட் பலவிடத்தும் இந்நூலாசிரியர் தொடர்பாகப் பயின்று வரக் காண்கிறோம்" என்பார் வீ.சி.கந்தையா **(1968:**டுஐஏ**)**. இவ்விதத்தில் காங்கேயனை நூலாசிரியரின் இயற்பெயராகக் கொள்ளமுடியும். கண்ணகி வழக்குரையைப் பாடியவர்களாகக் குறிப்பிடப்படுகின்ற இப்பெயர்கள் கோவலனார் கதை (யாழ்ப்பாணம்), சிலம்பு கூறல் (முல்லைத்தீவு) ஆகிய இரு நூல்களிலும் உள்ளன. கதை நகர்ச்சி, பாத்திரங்களின் குணவியல்புகள், புதிய சேர்ப்புக்கள் என்ற வகையில் இவற்றுக்கிடையே இன்றைய நிலையில் வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும் இம்மூன்றும் ஒரு மூல நூலிலிருந்தே மாற்றங்களைப் பெற்றுள்ளன என்பதற்கு அதிகப்பட்சச் சான்றுகளுள.

### தமிழ்ச் சமூகத்தின் சமய, சாதிய மேலாண்மை

சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு கண்ணகிவழக்குரைக் காப்பியத்தை கட்டமைத்த அதன் ஆசிரியர் ஈழத்து சமய, சாதிய கருத்தியலுக்கு அழுத்தம்கொடுத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் இல்லாத மாம்பழ அவதாரக்கதை, வெடியரசனுக்கும் மீகாமனுக்கும் இடையிலான போர்ப்பகுதி, மீகாமனின் குலப்பிறப்புடன் தொடர்புடைய கதைகள் முதலானவை கண்ணகி வழக்குரையில் முக்கியமானவையாகும். இப்பகுதிகள் ஈழத்துத் தமிழ் மக்களின் சமய, சாதிய நுண்ணரசியலைப் பேசும் வகையில் இணைக்கப்பட்டுள்ளன. இது குறித்ததாக இவ்வாய்வு அமைகின்றது.

### கண்ணகி தொன்மம் சைவத் தெய்வமாதல்

சமண சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறும் வகையில் சிலப்பதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள சமணத் துறவியாகிய கவுந்திஅடிகள் முதலான பாத்திரங்கள் கண்ணகி வழக்குரையில் இடம்பெறவில்லை. சைவ சமய வழிபாட்டுக் காப்பியமாகக் கண்ணகி வழக்குரையைக் கட்டமைத்த அதன் ஆசிரியர், சமண சமயக் கலப்பை நிராகரித்து, சைவ தூய்மைவாதச் சிந்தனைப் போக்கின் அடிப்படையிலேயே பாத்திரங்களையும் மிகக் கவனமாகப் படைத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகி மானிடப் பெண்ணாகத் தோன்றிப் பின்னரே தெய்வநிலை அடைகிறாள். ஆனால் கண்ணகி வழக்குரைக் கண்ணகி பிறப்பிலேயே தெய்வப் பெண்ணாகப் பிறக்கிறாள். சிலப்பதிகாரக் கண்ணகியுடன் ஒப்பிடுமிடத்து கண்ணகி வழக்குரைக் கண்ணகி மிக்க

சினம்கொண்டவளாகவும் பாண்டியனைப் பழி வாங்குகின்றவளாகவும் காணப்படுகின்றாள். மேலும் கண்ணகி வழக்குரைக் கண்ணகி கொலையுண்டு இரு துண்டங்களாகக் கிடந்த கோவலனைக் கண்டு அழுது புலம்பி கண்ணீரால் நீராட்டி, விண்ணை நோக்கிக் கை நீட்டி, கையில் வந்து விழுந்த பொன்னூசியில் சேலை நூலைக் கோர்த்து இருதுண்டங்களையும் தைத்து உயிர்ப்பித்து உரையாடுவதாக வருகின்றதும் கண்ணகியின் அற்புதச் சக்தியை வெளிப்படுத்துவதாகவும் வருகின்ற பகுதியும் சிலப்பதிகாரத்தில் இல்லை. சிலப்பதிகாரத்திலிருந்து மாறுபட்டமைந்த கண்ணகி தொடர்பான சித்திரிப்புக்கள் கண்ணகியை சைவ சமயத் தெய்வமாகக் கட்டமைக்கும் கண்ணகி வழக்குரையாசிரியரின் நோக்கத்தினைத் தெளிவாகக் காட்டுகின்றன.

கண்ணகி வழக்குரைக் காப்பியத்தில் இடம்பெறும் மாம்பழ அவதாரக் கதை முக்கியமான இணைப்பாகும். முற்பிறப்பில் பரராச முனிவரின் மகளாகப் பிறந்து, சிறந்த கற்புடையவளாகவும் கடவுட் பக்தி, அரும் குணம் போன்றவற்றில் சிறந்தவளாகவும் விளங்கிய பெண்ணின் பெருமையை, அவளின் கற்பைப் பூவுலகோர் போற்றும் வகையில் சிவபெருமான் படைக்க விரும்பியமை காரணமாகவும் மூன்று கண்களையுடையவனாகவும் அதனால் செருக்கு மிக்கவனாகவும் விளங்கிய பாண்டிய மன்னனின் நெற்றிக் கண்ணினை அழித்து அவனது செருக்கினை அடக்கவேண்டுமென்ற உமாதேவியாரின் வேண்டுகோளை நிறைவேற்றவும் கண்ணகி பிறந்ததாக இக்காப்பியம் குறிப்பிடுகின்றது. (செய்:46,49). இந்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு மாங்கனி அவதாரமாக தெய்வீகப் பிறப்பெடுத்தவளாக கண்ணகி காணப்படுகின்றாள். பாண்டிய நாட்டில் புதுமை வாய்ந்த மாங்கனி ஒன்று ஓரிடத்தில் காணப்பட்டமை, அதனைப் பறிக்க முயன்றோருடைய கைகளில் அகப்படாமலும் கண்களுக்கு மறைந்தும் தோன்றிய அக்கனியைப் பூமியில் விழுமாறு பாண்டிய மன்னன், தன் கை அம்பினால் எய்தமை, அறுக்கப்பட்டு அந்தரத்தில் நின்ற அக்கனியை முனிவர் ஒருவரின் ஆலோசனைப் படி நிலத்தில் விழ விடாது மன்னன் தன் கையில் பற்றியமை, உடனே அக் கனி ஒரு நெருப்புருண்டையாகி மன்னவன் கைகளில் விழுந்தமை, பயத்தினால் நடுங்கிய மன்னவன் உடனே நிலத்தில் கனியை விட்டு நெற்றி வியர்வையை மாங்கனி பட்ட தன் கைகளால் துடைத்தமை, அப்போது பாண்டிய மன்னனின் கர்வத்துக்குக் காரணமாக இருந்த நெற்றிக்கண் அழிந்து போனமை, பின்னர் நிலத்தில் விழுந்த மாங்கனியைப் பாண்டிய மன்னன் தன் மனைவியின் கையில் கொடுக்க, அவளும் அத் தெய்வக் கனியை ஒரு பொற்குடத்தில் இட்டுவைத்தமை, பொற்குடத்தில் வைக்கப்பட்ட மாங்கனி மூன்றாம் நாள் ஒரு தெய்வீகக் குழந்தையாகத் தோற்றமளித்தமை, அக் குழந்தையே கண்ணகி ஆகியமை முதலான செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரத்தில் கற்பின் கனலாகவும், அநீதியை எதிர்த்தழிக்கும் பேராற்றல் மிக்க சக்தியாகவும், தெய்வப்பேறு பெற்று வழிபடு தெய்வமாகவும் படைக்கப்பட்ட கண்ணகி பாத்திரமும் அப்பாத்திரத்தை மையப்படுத்திய கதையும் மிகக் கவனமாக உள்வாங்கப்பட்டு, கண்ணகி சைவர்களின் வழிபாட்டுத் தெய்வமாகவும் கண்ணகிவழக்குரை சைவ சமய வழிபாட்டுப் பிரதியாகவும் ஆக்கப்படுவதற்கு இந்த மாம்பழ அவதாரக்கதை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு வரலாற்று உணர்வும் சமய, பண்பாட்டு உணர்வும் தமிழர் அரசாட்சியும் மேலோங்கிக் காணப்பட்ட ஆரியச் சக்கர வர்த்திகள் காலம் களமாக அமைந்துள்ளது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சைவ சமயம் உயர்நிலையில் காணப்பட்டது.

தட்சணைகைலாய புராணம், திருக்கரசை புராணம், கதிரை மலைப்பள்ளு முதலான சைவசமயச் சார்புடைய நூல்கள் படைக்கப்பட்டது போன்றே கண்ணகி வழக்குரைக் காப்பியமும் படைக்கப்பட்டுள்ளது. கற்பைப் போற்றுதல், மழையை வருவிக்கும் சக்தியாக பெண்ணைக் கருதுதல், மாரி, காளி முதலான தாய்த்தெய்வ வழிபாட்டைப் போற்றுதல் முதலானவற்றைப் பேணிவருகின்ற ஈழத்துச் சமூக மனப்பாங்கிற்கு மிகப் பொருத்தமானதாக, சிலப்பதிகாரம் கட்டமைத்த கண்ணகித் தெய்வ உருவாக்கம் காணப்பட்டது. அதனை உள்வாங்கி ஈழத்து நாட்டார் கதைகளைப் பொருத்தமாகவும் மிகக் கவனமாகவும் பயன்படுத்தி கண்ணகி வழக்குரைக் காப்பியம் இயற்றப்பட்டுள்ளது. அவ்வகையில் கண்ணகியை மாம்பழ அவதாரமாகக் குறிப்பிடும் இக்கதை ஈழத்தில் சைவர்களின் தெய்வீக பெருமையை நிலை நிறுத்துவதற்கும், கண்ணகியைத் தமக்குரிய தெய்வமாக்கி உரிமை கொண்டாடுவதற்குமுரிய சமூக அரசியலாகவே பார்க்கப்பட வேண்டியதாகும். ஈழத்தில் காணப்பட்ட மாம்பழ அவதாரக்கதையை கண்ணகி வழக்குரையாசிரியர் கண்ணகியை சைவ சமயத் தெய்வமாகக் கட்டமைப்பதற்குப் பயன்படுத்தியதைப் போன்று ஈழத்தில் சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற அம்ப பத்தினி உபத்த (மாம்பழப்பத்தினிக் கதை), அம்ப விதமன (மாம்பழம் பிடுங்கிய கதை) முதலானவையும் கண்ணகியை பௌத்த சமயத் தெய்வமாகக் கட்டமைத்து உள்ளன. எனினும் ஈழத்தமிழரிடையே காணப்படுகின்ற மாம்பழ அவதாரக் கதைக்கும் சிங்களவரிடையே காணப்படுகின்ற கதைகளுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன.

**மீகாமன் - வெடியரசன் கதைத்தொன்மம் சாதிய அடையாளமாதல்**

கண்ணகி வழக்குரையாசிரியர் மக்கள் மத்தியில் வழங்கிவந்த நாட்டார் கதைகளையும் இணைத்து அக்காப்பியத்தை உருவாக்கியுள்ளார் என்பதற்கு வெடியரசன் - மீகாமன் பற்றிய இணைப்பு சிறந்த எடுத்துக் காட்டாகும். கண்ணகியின் திருமணத்தின் பொருட்டு நாகமணி எடுத்துவருவதற்காக மானாகரால் படைகளுடன் இலங்கைக்கு அனுப்பப்பட்ட படைத்தலைவனாக மீகாமனும் அவனை எதிர்த்த இலங்கையின் கடற்பிரதேசத்தை ஆண்ட மன்னனாக வெடியரசனும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ்விருவரும் பரதவர், முக்குவர் என்னும் சாதிய அடையாளத்துடன் தொடர்புபட்டவர்களாக உள்ளனர்.

மானாகர் தனது மகள் கண்ணகிக்குத் திருமணம் செய்வதற்கு நாகமணியை எடுத்துவருமாறு கடற்பயணத்தில் வல்லவனும் போராற்றல் மிக்க வீரனுமாகிய மீகாமனிடம் வேண்டிக் கொள்கிறார். தமது படையை எதிர்கொண்டு வெடியரசன் நிச்சயம் போர் செய்வான் என்று தெரிந்தமையால் போருக்குத் தயாராகி பெருத்த படையுடன் மீகாமன் கப்பலில் இலங்கைக்கு வருகிறான். இலங்கையின் வட கடற்பிரதேசத்தினை ஆட்சி செய்தவனான வெடியரசன் மீகாமனை எதிர்கொண்டு போர் செய்கின்றான். மீகாமனுக்கும் வெடியரசனுக்கும் இடையில் நடைபெற்ற போரில் மீகாமனால் வெடியரசன் சிறைப் பிடிக்கப்படுகின்றான். மீகாமனுடன் போரிட்ட வெடியரசனின் தம்பியான வீரநாரணன் இறக்கின்றான். தொடர்ந்து விளங்குதேவன் மீகாமனுடன் பெரும்போர் செய்கின்றான். இச்சந்தர்ப்பத்தில் மீகாமனும் வெடியரசனும் சமாதானத்திற்கு உடன்பட்டு போரை முடிவுறுத்துகின்றனர். மீகாமகன் நாகமணியை எடுத்து சோழநாட்டுக்குச் செல்கிறான்.

ஈழத்துச் சாதி அமைப்புடன் தொடர்புடையதாகவே மீகாமன் - வெடியரசன் போர்ப்பகுதி கையாளப்பட்டுள்ளது. மீகாமன் கரையார் சாதியினையும், வெடியரசனும் அவனது தம்பிமாரான விளங்கு தேவன், வீரநாரணன் ஆகியோர் முற்குகர் சாதியினையும்

பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரங்களாக உள்ளனர். இதனைக் கண்ணகி வழக்குரை மணிவாங்கின கதைப் பகுதியில் வரும் பின்வரும் பாடல் புலப்படுத்துகின்றது:

**"ஆர்த்தனர் முக்கியர் வென்றன ரோவென**
**அடலரி போல்வலி மீகாமன்**
**பார்த்துடன் கப்பலை மாற்றலர் படைதனில்**
**விடுமுடுக் கென்றிட வே**
**கோத்திரமாகிய பரதவர் தம்முடன்**
**கூறம ரக்கல மானதெல்லாம்**
**சேர்த்திணி யாக வகைப்பட முக்கியர்**
**சேனை திடுக்கிட வெட்டினரே"**

***(1968:104)***

இப்பகுதியில் வரும் வெடியரசன் - மீகாமன் போரினூடாக முற்குகர் - பரதவர் சமூகங்களுக்கிடையிலான ஆதிக்க நுண்ணரசியலே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "கதையினுடைய இப்பகுதி (கப்பல் கட்டும் கதை) பத்தினி தொன்மத்துடன் இணைக்கப்பட்ட உள்ளூர்ப் பிரதியாக உள்ளது. இதன் மூலம் இலங்கையின் கிழக்குக் கரையோர சாதிகளுக்கிடையே காணப்பட்ட முரண்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன கரையாருடைய பாரம்பரிய எதிரிகளாக முற்குகர் விளங்குகின்றனர். கரையார், முற்குகர் மோதல் இராமர் - இராவணன் யுத்தம் போலவும், மகாபாரதப் போர் போலவும் ஒரு வீர அளவில் விபரிக்கப்பட்டுள்ளது" (கணநாத் ஒபயசேகர, **1984:571**).

வீரநாரணன் இறந்தமையைக் கேள்விப்பட்டு அவர்களின் இளையவனாகிய விளங்குதேவன் ஒரு இலட்சம் சேனைகளைத் திரட்டிச் சென்று போரிடுவதும் அச்சந்தர்ப்பத்தில் வெடியரசன் மீகாமனிடம் "இவன் என் தம்பி. உனக்கும் இளையவன். போதும் போர்" என்று கூறி "தம்பியே இனிப்போர் போதும் வாளை வையும்" (கண்ணகி வழக்குரை, விளங்குதேவன் போர், செய்: **364-365**) என்று கூறுவதும் அதன் பின்னர் போர் சமாதானமாக முடிவுக்கு வருவதுமான செய்தி கூறப்படுகின்றது. இத்தன்மை கரையாருக்கும் முற்குகருக்கும் இடையிலான யுத்தத்தில் யாரும் வெற்றிபெறவில்லை என்பதையும் கரையார் சிறிது உயர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும் உணர்த்துகின்றது.

"வட இலங்கையில் முக்குகர் செல்வாக்குப் பெற்றிருந்தபோது கண்ணகி வழிபாடு செய்யும் பாண்டிய கரையார் வட இலங்கையில் குடியேறினர். இதனால் இவ்விரு இனங்களிடையே மனக்கசப்பு உருவானது. இதனை எடுத்துக் காட்டுவதே மட்டக்களப்பு வழக்குரை காவியம் கூறும் மீகாமன் வெடியரசன் போர் எனலாம். கண்ணகி வழிபாட்டுக்குரியவர்களை எதிர்த்ததால் காலப்போக்கில் கரையாரோடு கண்ணகி வழிபாட்டை மேற்கொள்ளத் தொடங்கினர். வட இலங்கையில் ஏற்பட்ட இம்மாற்றம் மட்டக்களப்பையும்பாதித்தது" (சு.சண்முகசுந்தரம், **2011:211-212**). இக்கருத்து கண்ணகி வழக்குரையில் கரையார் (பரதவர்) சற்று உயர்த்தப்பட்டுள்ளமைக்கான காரணத்தை உணர்த்துகிறது.

மற்றைய இனங்குழுமங்களை விடவும் தமது குலத்தின் மேன்னிலையைக் கூறுதற்கு குலப்பெருமை பேசுதல் ஒரு மரபாக இருந்துவருகின்றது. இதனைக் கண்ண கிவழக்குரையிலும் காணலாம். இந்நூலில் பரதவர், முற்குகர் சாதிகளின் குலப்பெருமைகள் கூறப்பட்டள்ளன.

திருமாலின் வேண்டுகோளுக்கமைய முக்குளித்து வலம்புரியை எடுத்து வந்தமையால் முக்கியன் என்று கூறி சிறப்பிக்கப்பட்டவனாகவும் அத்திருமாலிடமிருந்து எதிர்த்த படையை வெல்வதற்குரிய அருளைப் பெற்றவனாகவுமே வெடியரசன் குறிப்பிடப்பட்டுள்ளான்.

பாற்கடலில் விட்டு வந்த வலம்புரியை எடுப்பதற்கு யாருமில்லாமையால் திருமால் தன் தொடையை நோக்க அத் தொடையிலிருந்து பிறந்தவன் வெடியரசன் (பாடல்:3) என்றும், கடலில் முக்குளித்து வலம்புரிச் சங்கினைஎடுத்துவந்தவனாதலின்முக்கியன் என அழைக்கப்பட்டான் (பாடல்:4) என்றும் தன்னை எதிர்த்து வருகின்ற படையினை வெல்வதற்குரிய சக்தியை விஷ்ணுவிடமிருந்து பெற்றவன்(பாடல்:5) என்றும் முக்கியர் கோன் என்றும் கண்ணகிவழக்குரை குறிப்பிடுகின்றது. மேலும் வீரநாரணன், விளங்குதேவன் ஆகியோர் வெடியரசனின் தம்பிமார் என்றும் வெடியரசனும் அவனது தம்பியரும் விஷ்ணுவின் புத்திரர்கள் என்றும் (கடலோட்டு காதை, செய்:3-5) கண்ணகி வழக்குரைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.

இக்காப்பியத்தில் மீகாமன் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக மீகாமனின் குலப்பெருமையைக் கூறுகின்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ள பின்வரும் நான்கு கதைகளும் முக்கியமானவை:

(அ) மறைமுதல்வன் அருளால் மச்சகெந்தி, மச்சகெந்தன் பிறத்தல், விலாடநகர்க்கரசனாகிய அதியரசன் மச்சகெந்தியைக் கொண்டு வளர்த்தல், மச்சகெந்தி மீது மாமுனி பரராசன் காமம் கொண்டு புணர்ந்தமையால் அவள் வேதவியாதன் (வேதவியாசன்) என்ற ஆண் குழந்தையைப் பெற்றமை, மச்சகெந்தி சந்தனமா ராசனுடன் வாழும்போது பிறந்த இரு ஆண்குழந்தைகளும் திருமணம் செய்திருக்கையில் போரில் இறந்துபோதல், ஆட்சி செய்வதற்குக் குழந்தையின்மையால் மச்சகெந்தி தன் மகனாகிய வேதவியாதனை அழைத்து தனக்குக் குழந்தைவேண்டுமென்று கேட்க, அம்மறை முதல்வனின் பார்வை பட்டு, இறந்துபோன இருவரதும் மனைவியர் திருதராட்டிதனையும் பாண்டுமகாராசனையும் பெற்றெடுத்தல், அதன் வழி நூற்றுவரும் பஞ்சவரும் அரசாளுதல்.

(ஆ) பரதவர் குலத்தில் வந்த அதியரசன் தான் கடலில் பிடிக்கும் முதலாவது மீனை சிவனுக்கென்று விட்டுவரும் பழக்கமுடையவனாக இருந்த சந்தர்ப்பத்தில் அவனது குணத்தை ஆராயும்பொருட்டு சிவனார் வலையில் மீனாகத் தோன்றுதல், அம்மீனை அவன் சிவனுக்கென்று விட்டமையைக் கண்டு மகிழ்ந்து சிவன் அவனுக்கு பொன்னாட்டைக் கொடுத்தல்.

(இ) சாபத்தின் படி பார்வதி அதியரசனுக்கு மகளாகவும் ஆறுமுகன் கடலில் மகரமாகவும் பிறத்தல், மகரமாகப் பிறந்த ஆறுமுகன் மீன்பிடி வலைகளைச்சேதமாக்கிப்பேரழிவு செய்தமையால் மகரத்தைப் பிடிப்போர்க்கு தனது மகள் திரைசேரும் மடந்தையைத் திருமணம் செய்து தருவதாக அதியரசன் கூற, சிவனார் தோன்றி அம்மகரத்தைப் பிடித்து, திரைசேரும் மடந்தையாகிய பார்வதியைத் திருமணம் செய்தல்.

(ஈ) பாண்டியன் தனக்குப் பிறந்த ஆண் குழந்தையால் அழிவு வருமென்று பெரியோர்கள் கூறக்கேட்டு, அதியரசனை அழைத்து கடலில் விடும்படி கேட்க, அதியரசன் அக்குழந்தையைத் தன் வீட்டில் மறைவாக வைத்துவிட்டு கடலில் விட்டதாகப் பொய் சொல்லல், பாண்டியன் இறந்த பின்பு ஆள்வதற்கு குழந்தையின்றி யாவரும் வருந்தியவேளையில் அதியரசன் தன் வீட்டில் வளர்ந்து பெரியவனாகிய பாண்டியனது மகனை அழைத்துச் சென்று விடயத்தைச் சொல்ல யாவரும் கேட்டு மகிழ்ந்து, அவனை அரசனாக்கியமை.

இந்நான்கு கதைகளிலும் அதியரசன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளான். இந்த அதியரசன் பரதவர்களின் குல அரசனாகக் குறிப்பிடப்படுகின்றான். சைமன் காசிச்செட்டி (1873), வித்துவான் சோ.சு.இராமநாதபிள்ளை (1887), எட்கார் தர்டன் (1909) முதலானோர்

பரதவர்களில் அதியரசன் என்ற அரச வம்சம் இருந்துள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ளனர். எட்கார் தர்டனின் கருத்து பின்வருமாறு:

பரவர்கள் ஒரு காலத்தில் செல்வாக்கு உடையவர்களாகவும் கடற்பயணம் பற்றிய தங்களது அறிவின் காரணமாக மற்றச் சாதியர் மீது அதிகாரம் செலுத்துபவர்களாகவும் இருந்துள்ளனர். இவர்களுள் அதியரசன் என்ற பட்டப்பெயர் கொண்ட அரச வம்சம் இருந்துள்ளதாகவும் அதில் சிலர் மங்கை என்ற பெயருள்ள நகரிலிருந்து ஆண்டதாகவும் இந்நாளில் அது உத்தரகோசமங்கை என்ற பெயருடன் இராமநாதபுரம் அருகே விளங்குவதாகவும் கூறப்படுகிறது.(1909:141)

மீகாமன், "பரதவரில் வீரியர் கோன்" (மீகாமன் கதை, பாடல்:86) என்று சிறப்பிக்கப்படுகின்ற அதியரசனின் வருண குலத்தில் வந்தவனாகக் காட்டப்பட்டுள்ளான். இக்கருத்துக்களின்படி அதியரசன் பரதவர்களுடன் தொடர்புபடுத்தப்படுவதனாலும் கண்ணகி வழக்குரையாசிரியர் அதியரசனின் அன்புடனேயே நூலைப் பாடியதாகக் கூறுவதன்படியும் நூலாசிரியர் பரதவர் குலத்தவராக இருக்கலாமென்ற ஐயம் எழுகின்றது.

மேலும் மகரமாக முருகன் பிறப்பதாகக் கூறப்படுவதிலும் மீகாமனின் வருணகுலமே புலப்படுத்தப்பட்டுள்ளது. இந்துத் தொன்மைவியலில் மகரம் என்பது முன்பாதி முதலை, யானை, மான் போன்ற விலங்குகளின் வடிவங்களையும் பின்பாதி மீனின் வடிவத்தையும் கொண்டு கடலில் வாழும் மிருகத்தைக் குறிப்பதுடன் வருணனின் வாகனமாகவும் குறிப்பிடப்படுகின்றது. மீகாமன் கதையில் வரும் மேற்கூறிய நான்கு கதைகளையும் மானாகருக்குக் கூறி மீனாமனை அறிமுகம் செய்துவிட்டு இறுதியில் பின்வருமாறு கூறப்படுகின்றது:

**"..நிருதர்கிளை கருவறுக்கும் மாயவன்தான்**
**உண்டான திருப்பதிகள் ஒளிசேரு மிராமேச்சரம்**
**தண்டாத புகழ் புனையும் தக்கவாரிக் கரையரென்றே**
**கொண்டேற்றும் பேருடனே கூட்டி வந்தான் வருணர்தம்மை".(பாடல்:91)**

**"கூட்டி வந்தான் வருணர் தம்மைக் குறையறுத்துக் கரை நீளம்**

**வாட்டமற வைத்தநாளில் வழங்கிய பேர் கரையார்காண்**
**பாட்டிலவர் தம்பெருமை பகரவினித் தொலையாது**
**நீட்டுபுகழ் மீகாமன் சிறந்த மரபெனவுரைத்தார்".**
**(பாடல்:92)**

இப்பாடல்களின்படி மீகாமனூடாக அவன் சார்ந்த கரையார் (பரதவர்) யாரென்று கூறப்படுவதைக் காணலாம். உண்மையில் பரதவரின் குலப்பெருமையைக் கூறும் வகையிலேயே இக்கதைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இக்கதைகளின் மூலம் வலைவீசு புராணத்தில் உள்ளன. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் (Castes and Tribes of South india) என்ற நூலிலும் பரதவர் குல வரலாற்றைக் கூறுமிடத்து எட்கார் தர்டன் (Edgar Thurston) இக்கதைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

வெடியரசன், மீகாமன் ஆகியோரின் பிறப்புத் தொடர்பாக கண்ணகி வழக்குரையில் வருகின்ற செய்திகள் தெய்வங்களுடன் தொடர்புடையனவாகவுள்ளன. வெடியரசன் விஷ்ணுவுடனும் பரதவர் வர்ணன் மற்றும் சிவன் ஆகியோருடன் தொடர்புப்படுத்தப்பட்டுள்ளனர். "இதிகாச புராணங்கள் சிறப்பித்துக் கூறும் அரசர், தேவர், முனிவர் ஆகியோரின் வழித் தோன்றல்கள் என்று உரிமை பாராட்டும் வழக்கம் இந்து சமுதாயத்திலுள்ள சமூகப் பிரிவுகளிடையே நெடுங்காலமாக நிலவி வந்துள்ளது" (சந்திரசேகரம், சி., 2016:78) தெய்வங்களுடன் தொடர்புப்படுத்தி தம் சாதியினை உயர்த்திக் கூறும்பொருட்டே

வர்ணன், சிவன் ஆகிய தெய்வங்கள் மீகாமனுடனும், விஸ்ணு வெடியரசனுடனும் தொடர்புப்படுத்தப்பட்டு அதன்வழி பரதவரும் முற்குகரும் உயர்த்தப்பட்டுள்ளனர் எனலாம்.

பெருத்த படையும் வீரமும் கொண்டு கோட்டையமைத்து ஆட்சி புரிந்த கடலரசனாக வெடியரசன் கூறப்படுகின்ற போதிலும் அவனது போர்ச் சிறப்பு பல பாடல்களில் எடுத்துக் கூறப்படுகின்ற போதிலும் மீகாமனின் குலப்பெருமை கூறப்பட்ட அளவிற்கு அவனது குலப்பெருமை எடுத்துக் கூறப்படவில்லை. இதுவும் கண்ணகி வழக்குரையில் கரையார் சற்று உயர்த்தப்பட்டுள்ளமையினைக் காட்டுவதாகவே உள்ளது. அத்துடன் மேற்கூறியதுபோன்று கண்ணகி வழக்குரையின் ஆசிரியர் கரையார் சமூகத்தைச் சார்ந்தவராக இருக்கலாமென்ற ஐயத்தின் படி தன் குலப்பெருமையை ஆசிரியர் சற்று உயர்த்திப் பாடியிருக்கவும் வாய்ப்புள்ளது. கண்ணகி வழக்குரையில் வெடியரசன் மற்றும் அவனது தம்பிமாரினூடாக முற்குகர் சாதி பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளதாயினும் இந்நூல் மட்டக்களப்பு முற்குகரின் பெருமையைச் சொல்வதற்காக எழுந்தது என்று கருதமுடியாது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் முற்குகர்கள் கூடுதலாக வாழ்ந்தாலும், மட்டக்களப்புப் பிரதேசம் முற்குகர்தேசம் என்று அழைக்கப்பட்டாலும்கூட வடபகுதியிலும் முற்குகர் என்ற சமூக வகுப்பினர் வாழ்ந்து வருகின்றனர். கண்ணகி வழக்குரையில் மட்டுமன்றி முல்லைத்தீவில் வழங்கும் சிலம்புகூறல் காப்பியத்திலும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கும் கோவலனார் கதையிலும் வெடியரசனதும், அவனது தம்பிமார் பற்றியதுமான பாடல்கள் காணப்படுகின்றன. மேலும் வெடியரசன் கூத்து, மீகாமன் கூத்து முதலானவை வடபகுதியிலேயே ஆடப்பட்டு வந்துள்ளதுடன் வெடியரசனும் இலங்கையின் வடபகுதியை ஆண்ட மன்னனாகவே குறிப்பிடப்படுகின்றான். ஆகவே ஈழத்தில் வாய்மொழியாக வழங்கி வந்த மீகாமன் - வெடியரசன் கதைமரபு இந்நூலில் பரதவர் (கரையார்) - முற்குகர் சாதியினை, அச்சாதிகளுக்கிடையிலான ஆதிக்கப்போரினை எடுத்துக் கூறத்தக்க வகையில் மிகவும் திட்டமிட்டே வெடியரசன் - இணைப்புச் செய்யப்பட்டுள்ளதெனலாம்.

### வழக்குரை ஏடு படித்தலிலும் சாதிய, குடி மரபுகள் மேலாண்மை பெறல்

மாம்பழக்கதை அல்லது அம்மன் பிறந்த கதையினூடாக கண்ணகியை சைவ சமயக்கடவுளாக்கி, வெடியரசன் - மீகாமன் வரலாற்றினூடாக முற்குகர் - பரதவர் சமூகங்களின் அதிகாரப்போட்டியையும், தமிழர் வீரத்தையும் கட்டமைத்து அமையப் பெற்ற கண்ணகி வழக்குரைக் காப்பியம் கண்ணகியம்மன் வழிபாட்டிலும் முக்கிய இடம்பெறுகின்றது. இது சடங்கு நிகழ்த்துக்கையில் பாடப்படுவதிலும் சமூக, சாதிய மேலாண்மையே வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

கண்ணகிக்கான வழிபாட்டு மரபுகளுள் கண்ணகி வழக்குரை பாடப்படுவதும் முக்கியமானதாகும். பெரும்பாலான கண்ணகி அம்மன் ஆலயங்களில் கண்ணகி அம்மனுக்கு சடங்கு செய்கின்றபோது கண்ணகி வழக்குரை ஏட்டுக்கும் ஒரு மடை வைக்கப்படுகின்றது. இதனை ஏட்டு மடை என்று குறிப்பிடுவர். இவ்வாறு ஏட்டினை வைத்து பூசை செய்தே கண்ணகி வழக்குரை ஏடு படிக்கத் தொடங்கும் சம்பிரதாயம் காணப்படுகின்றது. இத்தன்மை கண்ணகி வழக்குரைக் காப்பியம் வழிபாட்டு மரபில் பெறுகின்ற முக்கியத்துவத்தினைப் புலப்படுத்துகின்றது.

கண்ணகிஅம்மனுக்குநிகழ்த்தப்படுகின்ற சடங்கு மரபுகளுக்கு ஏற்ப கண்ணகி வழக்குரையிலுள்ள காதைகள் படிக்கப்படுகின்றன.

மட்டக்களப்புப் பிரதேச சடங்கு வழிபாட்டிலிருந்து கண்ணகி வழக்குரையைப் பிரித்துப்பார்க்கவோ அல்லது கண்ணகி வழக்குரையினைப் பாடாமற் சடங்கு நடத்தவோ முடியாது என்ற அளவிற்கு அது சடங்கு முறைகளோடு பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். கண்ணகி அம்மன் கோயில்களில் கண்ணகி வழக்குரையில் வருகின்ற ஏடு தொடங்குதல், கலியாணக்காதை படித்தல், குளிர்த்தி பாடுதல் முதலானவை முக்கியமானவை என்றும் அவற்றை குறிப்பிட்ட குடியை அல்லது சமூக வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் பாடவேண்டும் என்றும் வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கண்ணகி வழக்குரையின் முக்கிய காதைகளைப் படிக்கின்றவர்கள் அக்கோயில்களின் தொடக்க வரலாற்றுடன் உரிமை பூண்டவர்களாக உள்ளனர். குறிப்பாக குறித்த கோயிலை உருவாக்கியவர்களாக அல்லது கண்ணகியம்மனின் சிலையினைக் கண்டவர்களாக அல்லது ஆலயத்தினைப் பராமரிப்பதற்கு என்று தொன்று தொட்டு கடமைபூண்டவர்களாகக் காணப்படுவதை அறிந்துகொள்ளலாம். இத்தன்மை கண்ணகி வழக்குரையைப் படிப்பதில் சாதி மேலாண்மை அதிகாரம் செலுத்துவதையே காட்டுகின்றது. குறிப்பாக தமது சாதிப் பெருமையை மக்களிடம் கடத்துவதற்குரிய அரசியலாகவே கண்ணகி வழக்குரைக் காப்பியம் பயன்படுத்தப்படுவதை இதனூடாகக் கண்டுகொள்ளலாம்.

## முடிவுரை

கண்ணகி வழக்குரைக் காப்பியம் சிலப்பதிகாரத்திலிருந்து வேறுபட்டு ஈழத்துப் பண்பாட்டோடு பொருந்திய, தனித்து வம்மிக்க மக்கள் காப்பியமாகக் காணப்படுகின்றது. கண்ணகி வழக்குரையில் வரும் மாம்பழ அவதாரக் கதையும் மீகாமனுக்கும் வெடியரசனுக்கும் இடையிலான போர்ப்பகுதியும் தமிழ்நாட்டிலோ, கேரளாவிலோ இல்லாதவையாகும். இவை ஈழத்தில் மக்கள் மத்தியில் காணப்பட்ட நாட்டார் கதைகளாகும். மாம்பழ அவதாரக்கதை கண்ணகியை சைவ சமயத் தெய்வமாக்கி அதன்வழி கண்ணகி வழக்குரையை சைவ சமய வழிபாட்டுப் பிரதியாகக் கட்டமைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வெடியரசனுக்கும் மீகாமனுக்கும் இடையிலான போர்ப்பகுதி முற்குகர், பரதவர் சமூகங்களிடையே காணப்பட்ட ஆதிக்கப்போரைக் குறிப்பதற்கும் முற்குகரைவிட பரதவரை சற்று உயர்த்திக் காட்டுவதற்கும் கையாளப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் வரும் சமணப் பெண் துறவியாகிய கவுந்தி அடிகள் முதலான பாத்திரங்கள் கண்ணகி வழக்குரையில் தவிர்க்கப்பட்டுள்ளமை மூலம் ஆசிரியரின் பிற சமயக் கலப்பற்ற, சைவ தூய்மைவாதச் சிந்தனைப் போக்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கண்ணகி வழக்குரைக் காப்பியத்தை கோயில்களில் எல்லாச் சமூகப்பிரிவினரும் அதாவது குடிகளும் பாடமுடியாது என்றும் குறிப்பிட்ட குடிகளே குறிப்பிட்ட பகுதிகளைப் படிக்கலாம் என்றும் காணப்படும் முறை அக்குடிகளின் மேலாண்மையைக் காட்டுவதற்குரிய அரசியலாகவே உள்ளது.

## சான்றாதாரங்கள்

### நூல்கள்

1. கந்தசாமி, ச. (தொகுப்பாசிரியர்) 2004. *சிலம்பின் செல்வி.* பருத்தித்துறை: தும்பளை.
2. கந்தையா, வி.சீ. (பதிப்பாசிரியர்). 1968. *கண்ணகி வழக்குரை.* காரைதீவு: காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம்.
3. கோயிலார் சிவசாமி. 2014. *கண்ணகை அம்மன் சிலம்பதிகாரம் கோவலனார் கதை.* முல்லைத்தீவு: புதுக்குடியிருப்பு.
4. சண்முகசுந்தரம், சு. 2011. *கண்ணகி: திராவிடத் தெய்வம்.* சென்னை: காவ்யா.

5. சாமிநாதையர். 1985. *சிலப்பதிகாரம்*, தமிழ்ப்பல்கலைக்கழகம்.
6. சிவநாயகமூர்த்தி, சு. 2003. *நெடுந்தீவு மக்களும் வரலாறும்*. ரொறன்ரோ: விவேகா அச்சகம்.
7. செல்லையா, மா.சே. (1962) *கோவலனார் கதை*. வியாபாரிமூலை: கலாபவன் அச்சகம்.
8. சொக்கலிங்கம், வீ. (பதிப்பாசிரியர்). 2008. *வலைவீசு புராணம்*. தஞ்சாவூர், சரசுவதி மகால் நூலகம்.
9. டாக்டர் நசீம்தீன். 1992. *கோவிலன் சரித்திரம்*. சிவகங்கை: அன்னம் வெளியீடு.
10. சிவப்பிரகாசம், மு.சு. 1988. *விஸ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு*. யாழ்ப்பாணம்: அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம்.
11. பரமசிவானந்தம், அ.மு. 1990. *வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்*. சென்னை: வள்ளியம்மாள் கல்வி அறம்.
12. மயிலை சீனி. வேங்கடசாமி. 1978. பழங்காலத் தமிழர் வாணிகம். சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்.
13. மேகராசா, த. (2015). *சிலப்பதிகாரப் பாத்திரங்களும் கண்ணகி வழக்குரைப் பாத்திரங்களும் ஒப்பியலாய்வு*. மட்டக்களப்பு: பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்.

**(ஆ) கட்டுரைகள்**

1. சந்திரசேகரம், சி. 2016. *சிலப்பதிகார புத்தாக்க வடிவங்களும் அவற்றின் புனைவுகளும்*. மொழிதல், தொகுதி:3. மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வு வட்டம்.
2. நடராசா, கு.ஓ.ஊ. 1989. *இலக்கியமாகிய சிலப்பதிகாரமும் மக்கள் காவியமாகிய கண்ணகி வழக்குரையும்*. சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரை. கிழக்குப் பல்கலைக்கழகம்: கலை கலாசார பீடம்.
3. பூலோகசிங்கம், பொ. 1983. *ஈழத்தில் சிலப்பதிகாரக் கதைகள் ஆசிரியரும் காலமும்*. வன்னிப்பிராந்தியத் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலர், முல்லைத்தீவு: அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக்கிளை மகாநாடு.